**ஜூன் – 9**

**"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்." - யோவா 16 : 33**

கர்த்தர் உண்மையுள்ளவராயிருந்ததற்காக உலகப் பிரகாரமான சுக வாழ்வின் பலன் அவருக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக, மரணபரியந்தம் துன்பமும் உபத்திரவமும் கிடைத்தன. அவர் "துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாயிருந்தார்." "தேவனை நிந்தித்தவர்களுடைய நிந்தனைகள் அவர் மேல் விழுந்தது. அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நமது நிமித்தமாக அவர் தரித்திரரானார். அவர் அவ்வளவு தரித்திரராயிருந்ததினால், நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்று சொன்னார். வேலைக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அவர்கள் அவரைத் துன்பப்படுத்தினதுண்டானால், நம்மையும் துன்பப்படுத்துவார்கள். அவரை நிந்தித்தவர்களுடைய நிந்தைகள் நம்மேலும் விழும். கர்த்தரைப் பின் பற்றுகிறவர்கள் இப்பொழுது எதிர்பார்க்கிற தற்கால ஒரே பலன், கர்த்தருடைய அன்பின் அங்கீகரிப்பின் மனப்பூர்வமான வெளிப்படுத்துதலாகும். **- Z '95, 207 (R 4071).**

கர்த்தருடைய ஜனங்கள் சகிக்க வேண்டிய உபத்திரவங்களில் இப்பொழுதுள்ள தீமையான நிலைமைகளின் பிரதிகூலங்களையும், எதிராளியின் தொடர்கிற எதிர்ப்பையும், உலகத்தாரின் உபத்திரவத்தையும், விசேஷமாக சோர்வு, வியாதி, துக்கம் இவைகளின் மத்தியில் மாம்சத்தின் எதிர்ப்பையும் எண்ணிக்கையிடலாம். தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகளின் மத்தியில் சந்தோஷப்படுவதற்கும் உலகத்தைக் கர்த்தர் ஜெயித்ததின் காரணமாக ஜெயங்கொள்ளுவதற்காக நம்பிக்கை வைக்கவும் நம்மை ஏதுவாக்கி, இந்த பிரதிகூலங்களுக்கு ஈடுசெய்கிற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கர்த்தர் நமக்குக் கொடுக்கிறார். **-P '32, 62.**

**ஒத்து வாக்கியங்கள்** :-

யோவா 15:19-25; 16:2,3; அப் 14:22; ரோம 5:3-5; 2தீமோ 3:12; எபி 10:32-34; 12:5-13; வெளி 3:19; யோவா 14:1,27; ரோம 8:35-37; கலா 6:14; 1யோவா 4:4; 5:4.

**கோபுரவாசிப்பு : Z '14, 291 (R 5544)**

**வினாக்கள் :** இந்த வசனம் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை என்னில் ஏற்படுத்திய விளைவுகள் எவை?